

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் துணைத்தலைவர் சாந்தாதேவி பெரம்பலூர் மாவட்ட தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் தலைவர் கே.கே.எம்.குமார் ஆகியோரால், கோணேரிப்பாளையத்தில் புதியதாக துவங்கப்பட்டுள்ள "கருணா' மினரல் வாட்டர் நிறுவனத்தை, மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பெரம்பலூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் மீனா அண்ணாதுரை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதையடுத்து ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூரம்பட்டி பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு திறந்த வேனில் வீதி வீதியாக சென்று நன்றி தெரிவித்தார். நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் போது மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, மாமன்ற உறுப்பினர் மணிகண்ட ராஜா, இமயம் சிவக்குமார், தலைமை கழக பேச்சாளர் ஈரோடு இளையகோபால், வட்ட கழக செயலாளர் சுரேஷ், திண்டல் சந்திரன், லோகசாமி உள்ளிட்ட சூரம்பட்டி பகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகராட்சிகுட்பட்ட புளிச்சக்காடு பகுதியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மனநலக் காப்பக கட்டடம் கட்டுவதற்கு மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.. உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் .ஏ.பி.மகாபாரதி, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம், மாவட்ட கழக பொருளாளர் மகா அலெக்சாண்டர் ஒன்றிய கழக செயலாளர்கள் ஏ.ஜி.ஜே .பிரபாகர், பஞ்சு.குமார், சீர்காழி நகர கழக செயலாளர், ,சீர்காழி நகர்மன்ற துணைத் தலைவர் சுப்பராயன் மற்றும் பலர் உள்ளனர்.

## திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில்

# தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டப் பொறுப்பாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருப்பூர், பிப்.17-*

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் பொறுப்பாளராக தலைமைக் கழகத்தால் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களாலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் நியமனம் செய்யப்பட்டதை தொடர்ந்து இன்று (17.02.2025 - திங்கள்கிழமை) காலை 08.00 மணியளவில் திருப்பூரில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி (திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகிய) எனது தலைமையில் நடைபெற உள்ளது.



அது சமயம் திருப்பூர் கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொழிற்ச்சங்க நிர்வாகிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விவசாய தொழில் நலனுக்காக ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட

# எளிதாக ஜி.எஸ்.டி. விலக்கைப் பெற ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன ?

### மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!

*நாமக்கல், பிப். 17*

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் கேள்வி நேரத்தில். நிதித்துறை இணையமைச்சர் ஸ்ரீ பங்கஜ் சவுத்ரி அவர்களிடம் துணைக் கேள்வியை எழுப்பினார்.

அது வருமாறு:-

(a) நிதிச்சட்டம் 1994 இன் பிரிவு 66 D (d) (i)இன் படி விவசாயத்திற்காக போர்வெல் தோண்டுவதற்கான ஜி.எஸ்.டி. விலக்கு, 12/2017CT (Rate) அறிவிப்பின் மூலம் ஜி.எஸ்.டி. யின் கீழ் தொடர்ந்து வருகிறதா?

(b) அப்படியானால், ஜி.எஸ்.டி. விலக்கு சீராக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் வழங்கிய வழிகாட்டுதல்கள் / விளக்கங்கள் மற்றும் இது தொடர்பான தவறான விளக்கங்கள் இந்த சேவைகள் மீது தேவையற்ற வரி விதிப்புக்கு வழிவகுக்கின்றனவா ?

(C) இத்தகைய தவறான விளக்கங்களை நிவர்த்தி செய்வதற்கும், நாடு முழுவதும் விதிவிலக்கை சீராகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழில்களின் நலனுக்காக இந்த வரிவிலக்கைப் பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்குவதற்கு மேலும் ஏதேனும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசாங்கம் பரிசீலிக்கிறதா? இவ்வாறு கேள்வி எழுப்பினார்.



இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய நிதியமைச்சர் பங்கஜ் சௌத்ரி,

(அ) 1994 ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் பிரிவு 66 D (d) (i) ன்படி, சேவை வரிக் காலத்தில், எந்தவொரு விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் தண்ணீர் வழங்குவதற்காக ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டுவது போன்ற சேவைகள் எதிர்மறைப் பட்டியலின் வரம்பிற்கு உட்பட்டது.

சாகுபடி, அறுவடை, கதிரடித்தல், தாவரப் பாதுகாப்பு அல்லது சோதனை உள்ளிட்ட எந்தவொரு விவசாயப் பொருட்களின் உற்பத்திக்கும் நேரடியாகத் தொடர்புடைய விவசாய நடவடிக்கைகளின் மூலம் விவசாயம் அல்லது விவசாயப் பொருட்கள் தொடர்பான சேவைகள்,

நிதிச் சட்டம், 1994 இன் பிரிவு 66 D (d)(i) ன் கீழ் உள்ள சேவைகள் GST காலத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளன, Sl. 28.06.2017 தேதியிட்ட எண். 12/2017 மத்திய வரி (விகிதம்) அறிவிப்பின் எண். 54(a) படி,

உணவு, நார், எரிபொருள், மூலப்பொருள் அல்லது பிற ஒத்த பொருட்கள் அல்லது விவசாய விளை பொரு ட்கள் விவசாய நடவடிக்கைகளின் மூலம் தாவரங்களை வளர்ப்பது மற்றும் அனைத்து வகையான விலங்குகளின் வளர்ப்பையும் தவிர, சாகுபடி, அறுவடை, கதிரடித்தல், தாவர பாதுகாப்பு அல்லது சோதனை உட்பட எந்தவொரு விவசாய விளை பொருளின் உற்பத்திக்கும் நேரடியாக தொடர்புடையது.

(b) & (c): ஜி.எஸ்.டி.யின் கீழ் எந்தவொரு விளக்கங்களும் ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன, இது மத்திய மற்றும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்க ளின் உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்பு அமைப்பாகும். அத்தகைய வழிகாட்டுதல் / தெளிவுகளை வழங்குவதற்கு ஜி.எஸ்.டி. கவுன்சிலிடமிருந்து எந்தப் பரிந்துரையும் இல்லை என ஒன்றிய நிதியமைச்சர் பங்கஜ் சௌத்ரி பதிலளித்தார்.

## கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர்

# துரை. கருப்புசாமி தந்தை வே.துரைசாமி மறைவு!

### கழகத்தினர் – பொதுமக்கள் அஞ்சலி!

*கடலூர் பிப்ரவரி 17.*

கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் நல்லூர் வடக்கு ஒன்றியம் என். நாரையூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் துரை. கருப்புசாமியின் தந்தை வே.துரைசாமி (வயது 96 ) அவர்கள் வயது மூட்பு காரணமாக நேற்று முன்தினம் (15.02.2025) சனிக்கிழமை பிற்பகல் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருகிறோம்.



தகவல் அறிந்ததும் கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் நல்லூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்னாருக்கு பாக்கியம் என்ற மனைவியும் இளவரசி என்ற ஒரு மகளும் துரை.கருப்பசாமி என்ற ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (16.02.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் வேப்பூர் அருகில் உள்ள நாரையூர் கிராமத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு அங்கு உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## கழக சட்டதிட்ட விதி : 26 – பிரிவு :1ன்படி

# தி.மு.கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கழக சட்டதிட்ட விதி: 26 பிரிவு 1ன்படி ஏற்கனவே உயர்நிலை செயல்திட்டக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுடன் திரு.பா.மு.முபாரக்** (எண். 71-74, எஸ்.ஏ.பி. இல்லம், பரசுராமன் தெரு, கிருஷ்ணாபுரம், குன்னூர், நீலகிரி - 643102.) **அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள் : 15.02.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில்,

# மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

### கோவி.லெனின் – புதுக்கோட்டை விஜயா சிறப்புரை! மாவட்டக் கழகச் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர், பிப். 17 -*

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், மத்திய பா.ஜ.க. மோடி அரசைக் கண்டித்து, குன்னம், கலைஞர் திடலில் நடைபெற்றது. ஓரவஞ்சனையான நிதிப்பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கிய திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகிவற்றிற்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட ச்சரிக்காதது எனத் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து பெரும் கண்டன பொதுக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம் ,குன்னம் கலைஞர் திடலில், நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் வி.லெனின் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள் .

இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப . பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஆர். முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ர விச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன், டாக்டர் செ.வல்லபன், மொழிப் போர் தியாகி மூங்கில்பாடி ரெங்கராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமிசேகர், ஏ.எம். ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் .ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், ஆர். அருண், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூ ல் அகமது,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ. ரமேஷ், முன்னாள் பெருந் தலைவர்கள் பிரபா செல்லப் பிள்ளை, .ராமலிங்கம்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர்கள் கோபாலபுரம் செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம்,

பாளை.மணிவண்ணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ்.செல்வகுமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ்,

மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா மற்றும் வனிதா சுப்ரமணியன், ஆர்.வினோத், சீனிவாசன், குன்னம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி மதியழகன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் உமா சந்தோஷ்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி நன்றியுரையாற்றினார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் ராமுவின் சகோதரரும் 30 வது வார்டு செயலாளர் நாகராஜ் இயற்கை எய்தினார். இதனையடுத்து நாகராஜ் உடலுக்கு மாவட்டச் செயலாளர் – ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சுகுமாரன், துணை மேயர் ஆனந்தய்யா, மாமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன் , மாநகர அவைத் தலைவர் செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.